Proceedings of Jaffna University International Research Conference (JUICE-2012), pp. 237-244, published: March 2014, Sri Lanka

# மனிதரல்லாத விலங்குகளின் உரிமைகள், நலன்கள் குறித்த மெய்யியல் அணுகுமுறைகள்: ஓர் பகுப்பாய்வு

ந. சிவகரன், இ. றேகன்
மெய்யியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
sivakaran18@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்:** இவ் ஆய்வுக்கட்டுரையானது விலங்குகளது உரிமைகள், நலன்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவங்கள் தொடர்பாக ஒழுக்க மெய்யியலிலின் அடிப்படையில் ஆய்வு செய்ய முனைகின்றது. இன்று மனிதர்களின் வாழ்வியல் முறைமைகள், நடத்தைக்கோலங்கள் என்பன தனிமனித இருப்புக்கு மட்டுமன்றி மனிதரல்லாத உயிரினங்களின் இருப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன. குறிப்பாக விலங்கினங்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும், தொடர்ச்சியான உயிர் வாழ்வுக்கும் பெரும் தடையாக அமைகின்றன. இவ்வாறான மனிதகளது செயற்பாடுகள் மற்றும் மனப்பான்மையானது ஒழுக்க மெய்யியலில் அங்கீகரிக்கக் கூடிய ஒன்றா? அறிவாராட்சியியன அடிப்படையிலும் விஞ்ஞான ஆய்வு முறைகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றா? என்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்கின்றது. இவ்வாறான பிரச்சினை களினை ஒழுக்க மெய்யியலிலின் அடிப்படையில் தெளிவுபடுத்துவதாகவும் தீர்வு காணுவதாகவும் இவ் ஆய்வு அமைகின்றது. இக் கட்டுரையானது பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், வரலாற்று முறையியல் என்பனவற்றின் துணைகொண்டு வடிவமைக்கப்படுவதுடன் இக் கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை முதல் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத்தரவுகளினூடாக பெறப்படவிருக்கிறது. முதல்நிலைத் தரவுகளானவை கட்டுரையாளனால் நேரடியாக அவதானிக்கப்பட்ட விடயங்களுடனும் விலங்குகளது நலன் குறித்துப் பேசும் சமூக ஆர்வலர்களுடனான கலந்துரையாடல் மூலமாகவும் பெறப்படவுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளானவை விலங்குகளது உரிமைகள் தொடர்பான ஒழுக்க மெய்யிலாலர்களின் நூல்களினூடாகவும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய சில சமூக நிறுவனங்களின் தரவுகள் மற்றும் உள்ளூர் பத்திரிகைக் கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டுள்ளன.

## I. அறிமுகம்

சமகால ஒழுக்க மெய்யியலில் மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள் மற்றும் அதன் நலன்கள் தொடர்பான கருத்துக்கள் முதன்மைக்குரிய விவாதமாக இனங்காணப்படுகின்றது. குறிப்பாக சமகால மேற்கத்தேய மெய்யியலாலர்களுடைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள் அதன் நலன்கள் தொடர்பாக அதிகளவான கரிசனை கொண்டிருப்ப தனை அவதானிக்க முடிகிறது. மனிதரல்லாத விலங்குகளிற்கு மனிதர்களினைப் போலவே உரிமைகள் இருக்கின்றனவா இல்லையா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகவே நோக்கப் படுகின்றது [12]. பெரும்பாலான மெய்யியலாளர்கள் மனிதர் அல்லாத விலங்குகள் அனைத்தும் உரிமைகளை கொண்டுள்ளன என்பதனை ஏற்றுக்கொள்வதில் உள்ள பின்வரும் இடர்பாடுகளினை தெளிவுபடுத்துகின்றனர்.

(i). மனிதரல்லாத விலங்குகளுக்கு உரிமைகளை கொடுக்கும் எண்ணம் பகுத்தறிவிற்கு முரண்பாடாக இருக்கிறது.
(ii). ஒழுக்கமான சமுதாயத்தின் உறுப்பினர்களாக மனிதர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஏனைய உயிரினங்கள் இவ்வாறான பண்புகளை கொண்டிருப்பதில்லை [12].

மேற்குறிப்பிட்ட பிரச்சினை விலங்குகளுக்கும் உரிமைகள் உண்டு என்பதனை நிராகரித்து உயர்வான மனித இனத்துக்கு மட்டுமே உரிமைகள் உண்டு எனக் கருதுகிறது. இதனை விரிவாக நோக்கும் பொழுது,

(i). விலங்குகள் சிந்திக்கும் ஆற்றல் அற்றவை. அதாவது தாமாகவே ஒரு முடிவை எடுப்பதற்கான வல்லமையை விலங்குகள் கொண்டிருக்கவில்லை.

(ii). ஒழுக்க ரீதியான கொள்கைக்கு ஏற்றவாறு முதிர்ந்த பாலூட்டி விலங்குகள் தங்களுடைய வாழ்க்கையை மேற்கொள்ளவோ அல்லது விளங்கிக் கொள்வதோ இல்லை. ஏனெனில் ஓர் ஒழுக்க சமுதாயத்திலேயே அதன் மத்தியிலேயே உரிமைகள் அர்த்தமுடையனவாக இருக்கும். ஒழுக்கமுள்ள சமுதாயத்தில் மனித உயிர்கள் மட்டுமே வாழ்கின்றன.
(iii). மனித உயிரினங்களும், முதிர்ந்த பாலூட்டி விலங்குகளும் உலகத்தை அனுபவிப்பதில் உள்ள வேறுபாடுகள் ஒழுக்க அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படவேண்டியவை.
(iv). ஆகையால் உரிமைகள் என்பது தனிப்பட்ட மனித கோட்பாட்டுக்கு உரியதாகவும் மனித உயிரினங்களுக்கே பொருந்தக் கூடியனவாகவும் இருக்கின்றன.

மனிதர்கள் இவ்விதமாக பண்புகளை வெளிப்படுத்துவதால் ஒழுக்கமான சமுதாயத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏனைய உயிரினங்கள் இவ்வாறான பண்புகளை வெளிப் படுத்தாமையினால் ஒழுக்க சமுதாயத்தின் உறுப்பினர்களாக இருக்க முடியாது [11].

மறுபுறம் விலங்குகளும் குறிப்பாக முதிர்ந்த பாலூட்டிகள் (Higher Animals) மனிதர்களினை போலவே உரிமைகளினை கொண்டுள்ளன என்பதற்குச் சார்பான வாதங்களும் பல மெய்யியலாலர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது,

(i). மனித விலங்குகளுக்கும், முதிர்ந்த பாலூட்டிகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறு பாடுகள் எதுவும் இல்லை.
(ii). மனிதர்கள் உரிமைகளைக் கொண்டுள்ளனர்.
(iii). ஆகவே முதிர்ந்த பாலூட்டி விலங்குகளுக்கும் உரிமைகள் உண்டு [8].

மேற்படி விடயங்கள் விலங்குகளின் உரிமைகள் தொடர்பாக இரண்டு விதமான பண்புகளினை வலியுறுத்துகின்றன. அவையாவன: மனிதர்களினைப் போலவே விலங்குகளும் தொடர்ந்து உயிர் வாழும் உரிமை, கௌரவத்துடன் உயிர்வாழும் உரிமை.

ஏனெனில்,

(i). மனித விலங்கும் பாலூட்டி விலங்குகளும் உயிரியல் தன்மைகளை ஒத்த மட்டத்தில் கொண்டுள்ளன.
(ii). தாங்கள் வாழ்கின்றோம் என்பதைப் பற்றிய எண்ணமும் வாழ வேண்டும் என்ற அக்கறையும் கொண்டுள்ளன.
(iii). தங்களுக்கு என்ன அசம்பாவிதம் சம்பவிக்கின்றன என்பதை அறிந்து கொள்கின்றன.
(iv). அவை சிலவற்றை விரும்பி, சிலவற்றை வெறுக்கின்றன.
(v). மனச்சாட்சியின் படி சில தெளிவுகளை அவை மேற்கொள்கின்றன.
(vi). வாழ்க்கையின் சிறந்த தரத்தை தங்களுக்கு கொடுக்கக் கூடியவாறு அவர்கள் வாழ்கிறார்கள்.
(vii). ஓரளவுக்கேனும் தங்களுடைய வாழ்க்கையை திட்டமிடுகின்றன.

தங்களுடைய வாழ்க்கையின் தரத்தையும் ஆயுளையும் பற்றிய அக்கறை அவற்றிற்கு உண்டு [3]. ஒழுக்க மெய்யியலில் விலங்கு உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் மூன்று விதமான அணுகு முறையில் நோக்கப்படுகின்றது. அவையாவன,

(i). நேரடியற்ற கடமையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை.
(ii). பயன்வழிவாத அடிப்படையிலான அணுகுமுறை.
(iii). உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை [3].

நேரடியற்ற அல்லது மறைமுகமான கடமையை (Indirect duty) அடிப்படையாக கொண்ட அணுகு முறையில் இமானுவல் காண்ட்டினது கொள்கை முதன்மை பெறுகின்றது. பயன்வழிவாத அடிப்படையிலான அணுகுமுறை Princeton பல்கலைக்கழகத்தில் உயிரியல், ஒழுக்கவியல் பேராசிரியராக இருந்த Peter Singer என்பவரினால் விரிவாக ஆராயப்பட்டது. உரிமையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை வட கரோலினா மாநில பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பேராசிரியராக இருந்த Tom Ragan இனாலும் நியூயோர்க்கில் அமைந்துள்ள Rutgers சட்டக் கல்லூரியில் சட்டம் மற்றும் மெய்யியல் பேராசிரியராக இருந்த Gary Francione இனாலும்

ஆராயப்பட்டது. இவர்களது அணுகு முறைகளிலாலான வெவ்வேறு வெளிப்படுத்தல்கள் ஒரு சரியான செயலை அதன் பின்விளைவுகளை வைத்து மதீப்பீடு செய்கின்ற ஒழுக்கவியல் கொள்கைகளிற்கிடையில் வெவ்வேறான பிரதிபலிப்பைக் காட்டி நிற்கின்றன [14].

## II. நேரடியற்ற கடமையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை

நேரடியற்ற கடமைகளை அடிப்படையாக கொண்ட கொள்ளையானது மனிதர்கள் விலங்குகள் மீது மனிதன் நேரடியற்ற அல்லது மறைமுகமான கடமையை (Indirect duty) மட்டுமே கொண்டிருக் கிறார்கள் என்பதனைச் சுட்டி நிற்கின்றது. ஆதாவது ஓர் மனிதன் பகுத்தறிவுள்ள பிற மனிதர்கள் மட்டிலேயே நேரடியான கடமையை கொண்டிருக்கிறான் எனினும் விலங்குகளுக்கு செய்கின்ற துன்புறுத்தல்கள் மனிதனிடத்தில் காணப்படும் அன்பு, கருனை, இரக்கம், தர்மம், மற்றும் பரிவு உள்ளிட்ட உயர்வான பண்புகளை அழித்துவிடுகின்றது. இந் நிலைமை மனிதன் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமைக்கு முரணாக இருக்கிறது. எனவே மனிதர் விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியது நேரடியற்ற அல்லது மறைமுகமான கடமையாக இருப்பதாக குறிப்பிடுகின்றார். இத்தகைய மறைமுகமான கடமைகளை பற்றிய விவாதங்களை உலகளாவிய சமயக் கொள்ளைகள், காட்டீசியன் கொள்கை (Cartesian Theories), காண்டிய கொள்கை (Kantian Theory), போன்றவை வேறுபட்ட வகைகளில் முன்வைத்துள்ளன. எனினும் காண்டின் கொள்கையே முதன்மையானதாக அமைகிறது எனலாம் [7].

காண்டின் கோட்பாடுகள் உலகளாவிய சமயக் கோட்பாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டனவாக காணப்படுகின்றன. ஒழுக்கவியல் ரீதியான செயற்பாடுகளின் மதிப்பீட்டைக் கணிக்கும் போது விலங்குகளின் நலன்கள் அவசியமானவை என்றதொரு கோட்பாட்டை Kant உருவாக்கினார். Kant இன் சிந்தனையின்படி சூழ்நிலைக்கேற்ப அடிப்படைக் கொள்கைகளை உடைய தனிப்பட்டவர்களின் செயற்பாடுகள் மனச்சாட்சியின்படி அல்லது ஒழுக்க அடிப்படையில் அனுமதிக்கக் கூடியவையாகும் [14]. குறித்த ஒரு செயலை செய்யும்படி வற்புறுத்தும் விருப்பங்களை விலங்குகளும் மனிதர்களும் கொண்டிருந்த போதிலும் மனிதர்கள் மட்டுமே தங்களுடைய விருப்பங்களில் இருந்து பின்வாங்கி எந்த விதமான செயல்களை செய்வது பொருத்தமானது அல்லது சரியானது என்பதை தெரிவு செய்யக்கூடிய ஆற்றல் உடையவர்களாக இருக்கிறார்கள் [15]. இந்த ஆற்றல் மனிதர்களின் பகுத்தறிவினாலேயே செயற்படுத்தப்படுகிறது. இத்தகைய ஆற்றலை மனிதரல்லாத விலங்குகள் கொண்டிராமையினால் அவைகளுக்கு பகுத்தறிவு என்பது இல்லை எனவும், சுயசிந்தனை அற்றவை எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் காண்டின் கருத்துப்படி மனிதரல்லாத விலங்குகளுக்கு மனக்கட்டுப்பாடு முற்றிலும் இல்லாததால் அவை நல்லெண்ணம் என்பதைக் கொண்டிருக்க முடியாது. எனவே அவை உள்ளார்ந்த பெறுமதியை கொண்டவை அல்ல என்கிறார் [14].

காண்ட் தனது கோட்பாட்டில் மனிதர்கள் கொண்டுள்ள பண்புகளைப் பற்றியும் அப்பண்புகளை விலங்குகள் கொண்டிராமை பற்றியும் தெளிவாகக் கூறுவதன் மூலம் மனிதர்கள் மிக வலுவான ஒழுக்கவியல் தகுதியைக் கொண்டிருப்பவர்களாகவும் விலங்குகள் அப் பண்பை கொண்டவை அல்ல என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். மனிதர்கள் சிந்திக்கவும், பேசவும் எந்தச் சூழ்நிலைகளையும் சமாளிக்க கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் விலங்குகள் அப்பண்பைக் கொண்டவை அல்ல என காண்டின் கொள்கை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறானதொரு சிந்தனைகளை மனிதரல்லாத விலங்குகள் குறித்து கொண்டிருந்தாலும் மனிதர்கள் விலங்குகள் மீது சில மறைமுகமான கடமைகளைக் கொண்டுள்ளனர் எனும் கருத்தை காண்ட் வலியுறுத்துகின்றார். காண்ட் விலங்குகளை கொடூரமானதும் மனிதாபிமானம் அற்ற முறையிலும் நடத்தக் கூடாது என வலியுறுத்துகிறார் [13]. ஏனெனில் விலங்குகளை கொடுமைப் படுத்தும் செயல்கள் நாளடைவில் ஒரு மனிதனையும் அதே முறையில் கொடூரமாக நடத்துகின்ற மனநிலைக்கு இட்டுச் சென்று விடும் என்பது அவரது கருத்து. இவ்விடத்தில் விலங்குகளைப் பொறுத்தவரையில் ஒரு மனிதன் அவற்றை பாதுபாப்பதற்கான மறைமுகமான கடமையைக் கொண்டுள்ளான். அதே சமயத்தில் அம்மனிதன் அவனைப் பொறுத்தவரையில் அவனது குணாதிசயங்களை வளர்க்கும் கடமையினையும் கொண்டுள்ளான். அத்துடன் தன்னுடைய மனிதப் பண்பை நெறிப்படுத்துவதற்கு கடமையைக் கொண்டிருக்கும் அதே வேளையில் ஏனையவர்களின் நலன்களைப் பேணுவதற்கான கடமையையும்

அவன் கொண்டிருக்கிறான். இதன் மூலம் தனக்குள்ளேயே ஒரு மகிழ்ச்சியான உணர்வையும் பிறருக்கான மகிழ்ச்சியையும் ஏற்படுத்த முடியும். இதற்குப் பதிலாக தன்னுடைய மனிதாபிமான உணர்வை மேம்படுத்துவதற்கான கடமையை நிறைவு செய்வதற்கு தன்னுடைய சொந்த மகிழ்ச்சியை ஒருவர் தேடுவதில் அவருக்கு மறைமுகமான கடமையும் உள்ளது. அதாவது பிறரின் நலன்களை நிறைவுசெய்வதில் ஒரு பங்களிப்பு செய்வதன் மூலம் தன்னுடைய மகிழ்ச்சியை உயர்த்துவதற்கு மறைமுகமான கடமையைக் கொண்டிருக்கிறான் என காண்ட் குறிப்பிடுகிறார் [1].

### III. பயன்வழிவாத அணுகுமுறை (Utilitarian Approach)

ஒரு செயலைச் சரியோ பிழையோ என நாம் தீர்மானிப்பதற்கு அச் செயலினால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை கருத்தில் கொண்டே முடிவு செய்யவேண்டும் என்பதே பயன்வழிவாத அணுகுமுறையாகும் [5]. மிகவும் எளிய வடிவில் கூறுவதானால் பயன்வழிவாதம் நன்மை என்பதனையே முதன்மையாக கொள்கிறது எனலாம். ஒழுக்க அடிப்படையில் ஒரு செயலின் சரியான தன்மையை தீர்மானிக்க அச்செயலின் பின்விளைவுகள் மற்றும் அச் செயலின் மூலம் ஏற்படும் வேதனைகள் மற்றும் மகிழ்ச்சிகள் என்பவற்றை கணிப்பிட்டு ஒருங்கு சேர்க்கப்பட்டு பின் ஏதேனும் ஒரு செயற்பாட்டுடன் ஒப்பிடும் போது பெறப்படும் கூடுதலான பெறுமதியை கொண்டே அச் செயலினை சரியா தவறா எனத் தீர்மானிக்க முடியும். எனவே உணர்ச்சியுள்ள எந்த உயிரினமும் வேதனையால் துடிக்க முடியும் என்பதையும் மகிழ்ச்சியை உணர முடியும் என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டால் இந்தக் கணிப்பீட்டில் விலங்குகளையும் சேர்க்க வேண்டும் எனவும் விலங்குகள் மனிதனது புலனுணர்ச்சிகளினை விட குறைவில்லாது கொண்டிருந்தால் அவற்றின் வேதனை மகிழ்ச்சி என்பன மனிதர்களுடன் ஒப்பிட்டுக் கணக்கில் எடுக்க வேண்டும் எனவும் இக் கோட்பாடு குறிப்பிடுகின்றது [5].

இவ்வாறனதொரு நிலைப்பாட்டுடனேயே பீற்றர் சிங்கர் (Petter Singer) விலங்கு நலன்கள் தொடர்பான பிரச்சினையை அணுகுகின்றார். அவரது கருத்துக்களில் முக்கியமான விடயம் என்னவெனில் மனித இனத்துக்கான நலன்களுக்கு சமனான கவனமெடுத்ததுலுடனேயே மனிதரல்லாத விலங்குகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும். அதாவது மனிதர்களில் ஒருவரோ அல்லது மனிதரல்லாத விலங்குகளில் தனிப்பட்ட ஒன்றோ துன்பப்படும் போது அதை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டால் இவை இரண்டிற்குமான வேறுபாட்டில் மனித இனத்துக்கு கூடுதலாகவும் அவ் விலங்கிற்கு குறைவானதுமாக மனிதர்கள் கவனம் எடுக்கக்கூடாது. இரண்டுக்கும் ஏற்படக்கூடிய வலியின் அளவு ஒரே அளவானதாகத்தான் இருக்கும் என்றவாறாக சமனாக நோக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு Singer கருதிய போதும் மனிதரல்லாத விலங்குகள் இயற்கையான உரிமையை கொண்டுள்ளன எனும் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதில் உள்ள புரட்சிகரமான விடயம் என்னவெனில் மனித இனத்துக்கு கொடுக்கப்படுகிற அதே அளவு நலன்கள் விலங்குகளுக்கும் கொடுக்கப்படுவது தான் "விலங்கு விடுதலை" [11] என்பதன் கருத்தாகும்.

பயன்வழிவாதத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஜெரமி பெந்தாம் குறிப்பிடுகையில், "தோல் கறுப்பாய் இருப்பதால் மட்டும் ஒரு மனிதன் பிறிதொரு மனிதனுக்கு அடிமையாக இருக்க வேண்டியதில்லை என பிரெஞ்சு மக்கள் ஏற்கனவே கண்டுபிடித்து விட்டார்கள். கால்களின் எண்ணிக்கையும் தோல்களின் தாங்கு சக்தியும் முதுகெலும்பின் நீளமும் ஒரு உணர்ச்சியுள்ள உயிரினத்தை தனிமைப்படுத்த போதுமான காரணங்களாக இருக்க முடியாது என்பதை ஏற்றுக் கொள்ளும் நாள் வரும். இந்த விதிக்கு மேலதிகமாக என்ன இருக்க முடியும். ஒரு குதிரையையோ நாயையோ அல்லது பிறந்து ஒரு நாள் தாண்டிய அல்லது ஒரு மாதம் கூட ஆகாத ஒரு குழந்தையையோ நன்றாக வளர்ந்து நன்கு உரையாடக் கூடிய ஒரு மனிதனுடன் ஒப்பிடமுடியாதுதான். ஆனால் இதற்கு நேர்மாறாக சிந்தித்தால் இந்த நிலைமை எப்படி இருக்கும்? இவ்வாறு வினாவைத் தொடுத்தால் அதை அவற்றால் நியாயப்படுத்த முடியுமா? அதற்காக அவை வருந்த வேண்டுமா? என்கிறார் [4]. பெந்தாம் இந்த கொள்கையை தர்க்க ரீதியான முடிவுக்கு ஒரு போதும் பின்பற்றவில்லை. எடுத்துக்காட்டாக மிருகங்களைக் கொலை செய்வதற்கு மனிதன் கையாளும் முறைகளுக்கு மன்னிப்பு கேட்பது மட்டுமல்லாமல் விலங்கின் இறைச்சியைச் சாப்பிடுவதை முற்றாக நிராகரிக்கவில்லை. இந்த விடயத்தை ளுைபெநச கையில் எடுத்த போது பெருமளவிலான Singer இன் கருத்துக்களுக்கு சாதகமாக பொதுமக்களின் அபிப்பிராயம் இருந்தது.

மிகப் பரந்தளவிலான சாத்தியங்களை படிப்படியாக பெற்று பெந்தமின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு மனிதரல்லாத விலங்குகளுக்கு சம நலன்களை கொடுக்கவேண்டும் எனும் நகர்வில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கினார் Singer [15].

### 3.1. மனிதரல்லாத விலங்குகளை துன்புறுத்தல் ஒழுக்கவியலுக்கு முரணானது

Singer தனது கட்டுரையின் ஊடாக வேதனைப்படுத்துவது தொடர்பாக எல்லாப் பக்கங்களில் இருந்தும் வரும் கருத்துக்கள் பொதுவாக விலங்குகள் வேதனையடைந்தும் வலியினை உணர்ந்து கொள்ளும் தன்மையுடையனவாயும் இருக்கின்றன எனக் கூறியபோதும் எப்போதும் அப்படி இருந்ததில்லை என்கிறார்.

விஞ்ஞானிகளுடனான தர்க்கங்களில் விலங்குகள் உணர்ச்சி உடையவை என்றும் அவை வேதனையை உணரமுடியும் என்றும் விஞ்ஞானரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்கும்படி கேட்கப்பட்டார்கள். அதற்கமைய ஆய்வாளர்களில் பெரும்பாலானோர் விலங்குகள் வேதனைப்பட்டும் வலியை உணர்வதுமாக நம்பத்தகுந்த வகையில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். மேலும் விலங்குகளின் வேதனையை மனிதர்களைப் போலவே குறைக்கக் கூடியதான சில வழிமுறைகளை ஏற்படுத்த முடியும் என்றும் எடுத்துக் காட்டியுள்ளனர். Animal liberation என்ற நூலில் Singer விலங்குகளின் தூண்டாற்றல்கள், உணர்ச்சிகள் மற்றும் புரிந்து கொள்ளல்கள் எல்லாம் பாலூட்டிகளிலும் பறவைகளிலும் நன்கு விருத்தி செய்யப்பட்டு மூளையின் ஒரு பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன என்கிறார். சிங்கர் Richard Sarjeant இனது ஆய்வை உண்மையானது என ஏற்றுக் கொண்டார். Sarjeant எடுத்துக் காட்டியது என்னவெனில் மனிதரல்லாத விலங்குகள் உடல் கூறுகளில் சிக்கல் நிறைந்த கூறுகளை கொண்ட மூளையின் மேற்பகுதியையும், நரம்பு அமைப்பு முறைகளையும் கொண்டிருக்கின்றன. அவை மனிதர்களுக்கு இருப்பது போலவே இருக்கின்றன மேலும் இதனை நிருபிப்பதற்கு உண்மையான சான்றுகள் உள்ளது. அந்த வகையில் மிருகங்களின் முதுகெலும்புகள் மனிதர்களை போலவே வேதனை அனுபவிக்கின்றன. மேலும் மனிதர்களுடைய உணர்வுகளை காட்டிலும் அவற்றின் உணர்வுகள் எவ்வளவோ மேலானவை என்பதனை எளிதாகக் காண்பிக்க முடியும் என்கிறார்.

பொதுவாக விலங்குகளின் உணரும் தன்மை மற்றும் அவற்றின் வேதனை பற்றிய பிரச்சினை ஏன் எழுகின்றது எனின் விலங்குகள் பேசமுடியாதவை என்பதனாலாகும். இதனால் எப்போது ஒரு விலங்கு வேதனை அனுபவிக்கிறது என்பதனை அறிந்து கொள்ளமுடியாது என்று விஞ்ஞானிகள் விவாதிக்கிறார்கள். எனினும் இந்த நிலமை மாறலாம் ஏனெனில் கூடுதலான வாலில்லா குரங்குகள் குறியீட்டு வடிவிலான மொழி பயிற்றப்படுகிறது எனினும் சைகை மொழிகளை சரியான முறையில் விளங்கிக் கொள்கின்றனவா என்பது புதிராகவே இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் Singer இந்த விவாதத்தை தொடர்ந்து எழுதுகையில், மொழியானது வலியினைப் புரிந்து கொள்வதற்கு தேவையான ஒன்றாக இருக்கிறது என்கிறார். ஒரு மனிதன் வேதனைப்படும் போது அவன் எழுப்பும் குரலைக் கொண்டும் அவனது நடத்தையை கொண்டும் நாங்கள் விளங்கிக் கொள்ளலாம். Ludwig Wittgenstein விவாதிக்கையில் யாதேனும் ஒருவர் இயங்க முடியாத நிலையில் தனது உடலின் ஒரு பகுதியை இறுக்க பிடித்த வண்ணம் அவலக்குரல் ஏற்படுத்தினால் அதே அளவு வேதனை எங்களுக்கும் ஏற்படும் என நாம் நம்பினால் அவ் வலியினை நாங்கள் உணர்ந்து கொள்ள முடியும் என்கிறார். Singer விவாதிக்கையில் விலங்குகள் வேதனைப்படும் போது அவை நடந்து கொள்ளும் முறை வேறு விதமான கருத்தை கொண்டிருக்கும் என்று கருதுவதற்கான எந்தவிதமான காரணமும் இல்லை என்று கூறுகிறார்.

### 3.2. புலால் உண்ணுதல் ஒழுக்கவியலுக்கு முரணானது

Singer விலங்குகளின் இறைச்சியை நுகர்வது ஒழுக்க ரீதியில் தவறானது என எடுத்துக் காட்டுகின்றார். அவரது கருத்தின் படி புலால் உண்பதால் ஏற்படும் மகிழ்ச்சியானது அவ் விலங்கை கொல்லும் போது அதற்கு ஏற்படக்கூடிய வேதனையிலும் பார்க்க உயர்வாக இருந்தால் புலால் உண்பதில் தவறில்லை என்கிறார். இதன் மூலம் அவர் கூற வருவது என்னவெனில் நடைமுறையில் ஒரு விலங்கை கொல்லும் போது நிச்சயமாக அதற்கு வேதனை ஏற்படவே செய்யும் வேதனை

இல்லாமல் கொல்வது சாத்தியமில்லை எனக் கூறுவதன் மூலம் விலங்குகளை கொன்று ஊன் உண்ணுவதை நிராகரிக்கிறார் [13].

விலங்குகளுக்கான சம கவனமெடுத்தல் என்ற கருத்தை எதிர்த்து வந்த மெய்யியலாளரான R.G Fray என்பவர் குறிப்பிடுகின்ற போது தங்களுடைய உணவுத் தேவைகளை கருத்தில் எடுக்கும் போது பசியுள்ள மனிதர்கள் மிருகங்களில் ஏற்படும் வேதனையை பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று கூறுவதுடன் மரக்கறி உணவை உண்பதானது அதன் எல்லா வடிவத்திலும் ஒரு முட்டாள்தனம் என்கிறார். விலங்குகளின் இறைச்சியை உண்ணுகின்ற ஒருவருக்கு அவ்விலங்கினைத் துன்புறுத்துவதிலோ கொல்வது தொடர்பிலோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்கிறார். அதாவது இறைச்சியை கடையில் வாங்கி உண்ணும் மனிதர்கள் அதனைத் தொழிற்சாலைகளில் கொல்பவர்களின் பொறுப்பில் தொடர்பில்லை என்கிறார். மேலும் அவர் விளக்குகையில் என்னுடைய அயலவன் ஒரு வான் கோழியை சுட்டு வீழ்த்துகிறான் என வைத்துக் கொண்டால் அவ்வாறு செய்வது பிழை என்றாலும் அதை நான் சாப்பிடுவது தவறாகாது என்கிறார். விலங்குகளை கொலை செய்வது அவற்றின் உரிமைகளை மீறுவது அவற்றை துன்புறுத்துவது போன்றவற்றை கருத்தில் எடுக்கும் போது இவை யாவற்றிற்கும் பொறுப்புக் குரியவன் கொல்பவனேயன்றி அவற்றை உண்பவனில் தவறில்லை என்கிறார் [2].

R.G Fray இன் இத்தகைய நிலைப்பாடுகள் ஏற்கக் கூடியதாக இல்லை அதாவது ஒரு திருடன் நகையை திருடுகிறான் எனின் சமூகத்தில் அவனது மதிப்பு குறையும் அதே திருடிய நகையை தெரிந்தும் நான் வாங்கினால் நான் குற்றவாளியில்லையா? அவ்வாறு திருடிய நகையை நான் வாங்குவது அத் திருடனின் செயலை ஊக்குவிப்பதாகவே இருக்கும். இவ்வாறு வாங்குவதால் மேலும் திருட நான் காரணமாயிருக்கிறேன் அல்லவா? இதை வாங்கியது அரச சட்டங்களின் கீழும் சமுதாயச் சட்டங்களின் கீழும் தவறாக இருக்கும் போது புலால் உண்பவன் நகையை வாங்கியவனில் இருந்து எவ்வாறு வேறுபடுவதாக கருதலாம்? புலால் உணவை உண்பவன் இல்லாவிடில் அதனை விற்பவனும் இருக்க மாட்டான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். Fray இன் நிலைப்பாடுகள் தொடர்பாக Singer குறிப்பிடுகையில் "Fray இன் கொள்கைகள் பல மனிதாபிமான விடயங்களில் அவை செயலாற்றுவதைப் பற்றி நான் மதிப்புக் கொடுக்கிறேன். இருப்பினும் விலங்குகளின் பயன்பாடு பற்றிய தத்துவரீதியான கோட்பாட்டில் குறைபாடுகள் உள்ளன" என்கிறார். Singer இன் கருத்தின்படி ஒழுக்கத்திற்கு மாறாக பலியிடப்பட்ட விலங்குகளின் இறப்பு வேதனை இல்லாமல் இருந்தால் கொலை செய்வது ஒரு பாவம் என்று கருத முடியாது. அத்துடன் இறந்த விலங்கைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்களுக்கும் அதில் மனக்கவலை இல்லை எனின் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்கிறார் [6].

### 3.3. விலங்குகள் மீதான பரிசோதனை ஒழுக்கவியலுக்கு முரணானது

பண்ணைகளில் இருக்கின்ற விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுவதையும் விலங்குகளை மருத்துவ ரீதியாக பரீட்சிப்பதாக கூறி அவற்றை வேண்டத்தகாத முறையில் பயன்படுத்தப் படுவதையும் வெளியுலகிற்கு காட்டிய Singer மருத்துவ பரிசோதனைக்காக விலங்குகளை பலி கொடுப்பது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்றும் ஒழுக்க ரீதியில் அது தவறானது எனவும் எடுத்துக்காட்டினார் [11].

## IV. உரிமைகளை அடிப்படையாக கொண்ட அணுகு முறை (Rights based Approach)

உரிமைகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறையின் முன்னோடிகளாக Tom Ragan மற்றும் Gary Francione போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். Tom Ragan மற்றும் Gary Francione இனது அணுகுமுறையானது பின்விளைவுகளை கருத்தில் கொண்டு உருவாக்கப்படவில்லை அதாவது உரிமைகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறையானது விலங்குகள் குறித்த பயன்வழிவாத அடிப்படையிலான பார்வையை நிராகரித்து அதற்கு மாற்றீடாக விலங்கு உரிமைகள் குறித்த கொள்கையாக முன்வைக்கிறதெனலாம் [9]. இவரது கருத்தின்படி விலங்குகளும் உயிர்ப் படைப்புகள் தான் அவைகளும் உரிமைகளை கொண்டுள்ளன அதனை மனிதர்கள் அலட்சியப் படுத்தக் கூடாது என்கிறார். அதாவது நாங்கள் விரும்புவது போல் எந்த விலங்குகளையும்

கையாளக் கூடாது என்பதாகும். இன்னொரு வகையாக கூறினால் நாங்கள் அவற்றிற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதையும் அவற்றிற்கு உரிமைகள் கொடுக்க கடப்பாடு உடையவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் இந்த கடப்பாடு நேரடியானதாகவே இருக்க வேண்டும் என்கிறார்.

## 4.1. ரொம் றேகன் (Tom Ragan)

நவீன ஒழுக்க மெய்யியலாளர்களுக்கு இடையில் முதன் முதலில் மிகவும் முன்னேற்றகரமான ஓர் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட விலங்கு உரிமைகளுக்கான கோட்பாட்டை Tom Ragan என்பவர் முன்வைத்தார். இவரது உரிமைகளை மையப்படுத்திய சிந்தனைகளானது மிகவும் வலுவான முறையில் 1983ல் அவரது The Case For Animal Rights எனும் நூலில் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. விலங்குகளும் சுய உணர்வு உடையவை என்பதையும் தாங்களும் உயிர் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை குறிப்பிடத்தக்களவு கொண்டுள்ளன என்பதையும் இவையாவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பாலூட்டிகளில் சிறப்பாக காணலாம் என்கிறார்.

Ragan விலங்குகள் உள்ளார்ந்த தனித்தன்மை கொண்டவை என்று கூறும் போது தனிப்பட்ட தன்மை (individuals) என்பதில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றார். நம்பிக்கைகள், விருப்பங்கள், ஞாபகசக்தி, எதிர்காலம் பற்றிய உணர்வு தமது சொந்த எதிர்காலம் பற்றிய உணர்வு, உணர்ச்சி வசப்படக்கூடிய தன்மை, மகிழ்ச்சியை வேதனையை உணரக்கூடிய வாழ்க்கை முன்னுரிமை, தங்களுடைய விருப்பங்களும் இலக்குகளிற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆற்றல், கால குறியீடுகளை மனதால் அறியும் திறன், பிறிதொருவரின் நலன்களுக்காக அவை நன்மையாக இருப்பினும் தீமையாக இருப்பினும் தானே தர்க்க ரீதியாக ஆராய்ந்து அவற்றை பரீட்சிப்பதன் மூலம் தன்னுடைய நலனைப் பேணல் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும் என குறிப்பிடுகிறார் [9]. விலங்குகளின் மன ஆற்றலையும் அதனோடு தொடர்புபட்ட விலங்கின் திருப்திகரமான வாழ்க்கையையும் உள்ளடக்கும் வினாக்களையும் தெளிவுபடுத்தும் Ragan உடைய வாதம் என்னவெனில் நாங்கள் விரும்புவது போல் எந்த விலங்குகளையும் கையாளக்கூடாது என்பதாகும். இன்னொரு வகையாக கூறினால் நாங்கள் அவற்றிற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதையும் அவற்றிற்கு உரிமைகள் கொடுக்கக் கடப்பாடு உடையவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் இந்த கடப்பாடு நேரடியானதாகவே இருக்க வேண்டும் என்கிறார்.

உரிமைகளுக்கான தோற்றப்பாட்டில் இருந்து தன்னுடைய சொந்தக் கருத்தாக Ragan கூறுவது என்னவென்றால் விலங்குகளுக்கான மனிதர்களின் கடமை என்னவாக இருக்க வேண்டும் என்பதையே அதாவது தனிப்பட்ட ஒரு உயிரினம் அது மனிதனாக இருந்தாலும் சரி விலங்குகளாக இருந்தாலும் சரி அவற்றை கொடுமைப்படுத்தக் கூடாது என்பதாகும். மேலும் அவர் தற்பாதுகாப்பிற்காக வன்முறையை பயன்படுத்துவதில் சாத்தியமான விதிவிலக்குகள் இருக்கக்கூடும் என்கிறார். இதிலிருந்து அறியக்கூடிய அடிப்படை விதி என்னவெனில் எங்களுக்கு தீங்கு ஏற்படுத்தாத எவற்றுக்கும் நாங்கள் தீங்கு செய்யக் கூடாது, அனைத்து உயிரினங்களும் இயற்கையாகவே ஒரே மாதிரியாகத்தான் உள்ளன என்பதாகும்.

## 4.2. கரி பிரான்சியோன் (Gary Francione)

விலங்குகளுக்கான உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட மெய்யியல் அணுகு முறையில் Ragan இற்கு அடுத்த படியாக Gary Francione இனை குறிப்பிட்டு கூறலாம் இவரது சிந்தனையின் படி ஒரே ஒரு உரிமைதான் விலங்குகளுக்கு உண்டு. அதாவது அவற்றை மற்றவர்கள் (மனிதர்கள்) தங்களுக்கு சொந்தமாகப் பயன்படுத்த முடியாது என்கின்றதற்கான உரிமையே அதுவாகும். மேலும் Francione குறிப்பிடுகையில் விலங்குகளை கொடுமைப்படுத்துவதை குறைப்பதற்காக முதலாவதாக நாம் செய்ய வேண்டிய விடயம் என்னவெனில் உணர்ச்சியில்லாத விலங்குகளை சட்டரீதியாக சொந்தம் கொண்டாடுவதை நீதிக்குப் புறம்பானதாகவும் அத்தகைய சட்டங்களை இல்லாமல் செய்வதுமாகும் என்கிறார் [9].

மேலும் அவர் வாதிடுகையில் விலங்குகளின் நலன்களில் எங்களின் கவனத்தை செலுத்துதல் உண்மையில் விலங்குகளின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் என்கிறார். ஏனெனில் அவற்றை எமது சொந்த உடமையானவை என்ற எண்ணத்துள் தள்ளி அவற்றை இன்னும் அதிகமாக பொதுமக்கள் பயன்படுத்துவதை வசதியாக்கும் என்று குறிப்பிடுகிறார் [12].

## V. முடிவுரையும் பரிந்துரைகளும்

விலங்குகள் நல்லவண்ணம் வாழ்வதற்கான பொருத்தமான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே மனிதனது முக்கியமான நோக்கமாகின்றது. மனிதர்களுக்கு சமனான நலன்களை விலங்குகளுக்கும் கொடுக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. மனிதன் தன்னைத்தான் பேணிக் கொள்வது மட்டும் அவனது கடமையல்ல இப் பூமியையும் அதில் ஏனைய ஜீவராசிகளையும் பாதுகாக்க வேண்டியதும் அவனது கடமையாகும். இல்லாவிடில் மனித இருப்புக்கே அச்சுறுத்தலாகிவிடும். இயற்கையானது தன்னியல்பான முறையில் ஓர் சமநிலையை பேணி வருகின்றது. மனிதனது செயற்பாடுகள் இச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால்தான் இன்று பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இயற்கையின் சமநிலையில் விலங்குகளின் இருப்பும் அவற்றின் இயல்பான செயற்பாடுகளும் இன்றியமையாதது. இந்நிலையில் விலங்குகளை அளவுக்கு அதிகமாக கொல்வதும், அவற்றின் வாழ் இடங்களை அழிப்பதும் இயற்கையில் பாரிய விபரீதமான மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே பிற உயிர்களை பாதுகாக்க வேண்டிய கடமையைக் கொண்டனவாக மனிதன் இருக்கின்றான். இதனூடாக விலங்குகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

## உசாத்துணைகள்


[1]. Burns J.H. and Hart H.I.A., "The collected works of Jeremy bentham", London, Oxford University press, pp. 283-289, 1996.
[2]. Derek R, Hall Frances Brown Tourism and Welfare: Ethics, Responsibility and Sustained Well being: USA University of Wisconsin press, pp. 64-69, 2006.
[3]. Francione, Gary, "Animals, property and the law", India: Temple University press, pp. 34-40, 1995.
[4]. Francione, Gary, "Rain without Thunder: the Ideology of the Animal Rights Movement", India: Temple University Press, pp. 67-80, 1996.
[5]. Franklin, Julian H., "Animal Rights and Moral Philosophy", Columbia: University of Columbia Press, pp. 12-15, 2005.
[6]. Fraser, David, "Understanding animal welfare: the science in its cultural context", London: John Wiley and Sons, pp. 124- 129, 2008.
[7]. Gary Steiner, "Anthropocentrism and its discontents the moral status of animals in the history of western philosophy", Pittsburgh: University of Pittsburgh press, pp. 56-60, 2005.
[8]. http://appethics.blogspot.com/worldview-theories
[9]. http://webster.edu/corbetre/philosophy/animals/singer
[10]. http://www.animalrights.net/animalrights
[11]. http://www.animal-rights-library.com/texts-m/singer
[12]. http://www.bbc.co.uk/ethics/animals/rights
[13]. Nash Roderick, "The rights of nature: A history of Envirnmental ethics", Madision: University of Wisconsin press, pp. 198-205, 1989.
[14]. Ryder Richard, "Animal revolution changing attitudes towards specialism", USA: Bloomsbury Academic, pp. 78-83, 2000.
[15]. Sunstain, R., "Animal Rights: current debate and new direction", London, Oxford University press, pp. 326-329, 2004.